REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: ஐப்பசி 12உ வியாழன் (28—10—54) ★ ★ வெளியூர்: ஐப்பசி 13உ வெள்ளி (29—10—54) [இதழ் 117

200 தமிழர்கள் தாயகம் திரும்பிவிட்டனர்!

★

கொழும்பு, அக். 27—

நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்தரவிடப் பட்ட 5,000 தமிழர்களில் இதுவரை 200 பேர் இந்தியாவிற்குச் சென்றுவிட்டனர் என்று தெரிகிறது. முதல் பிரிவினைச் சேர்ந்த மற்றவர்கள் ஜனவரித் திங்களுக்குள் இலங்கையை விட்டு வெளியேறிவிடுவார்கள்.

இரண்டாவது பிரிவினராகிய 5,000 தமிழர்களுக்கு ஜனவரி மாதத்தில், மூன்று மாத தவணை கொடுத்து, இலங்கை சர்க்கார் வெளியேற்ற உத்தரவுகளை அனுப்பும் என்று தெரிகிறது.

'போலீஸ் சுட்டதின் எதிரொலியே புதுக்கிராமசம்பவம்'

'அவ்வெறிச் செயலுக்கும் கழகத்திற்கும்துளியும்தொடர்பில்லை'

'கொள்ளை நடைபெற்றது என்பது வெறும் கற்பனை'

'கொலை செய்யும் நோக்கமுமில்லை-கொள்ளையிடும் கருத்தும் இல்லை'

'சதி செய்தனர் என்பதை என்னுல் நம்ப முடியவில்லை'

தூத்துக்குடி சதி வழக்கில் தீர்ப்பு

திருநெல்வேலி, அக். 27—

தூத்துக்குடி தி. மு. கழகத் தோழர்கள் மீது, 1953 ஜூலை 15-ல் இரயில் நிறுத்தப் போரில் ஈடுபட்டதற்காக, ஆச்சாரியார் ஆட்சிபீடத்திலிருந்தபோது தொடரப்பட்ட சதி வழக்கில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

நமது தோழர்கள் மீது, இரயிலை நிறுத்த, இரயில் பாலங்களைக் கொளுத்த, கலகம் செய்ய, கொள்ளையிட, விடுகளில் புகுந்து நாசம் விளைவிக்க, புதுக்கிராமத்தில் உள்ள பார்ப்பனர்களை அடித்து காயப்படுத்துவதின் மூலம் அவர்களைக் கொல்ல—ஆகிய குற்றங்கள் புரிய சதி நடத்தியதாகவும், (120-பி, இ. பி. கோ.) மற்றும், பயங்கர ஆயுதங்களைக் கொண்டு, விடுகளைத் தாக்கி, கொள்ளை யிட்டு, கொலைபுரிய யத்தனித்ததாகவும்—147, 148, 336, 448, 307, 114, 397, 395, 380, 424 ஆகிய இ. பி. கோ. பிரிவுகளின் படியும், இந்திய இரயில்வே சட்டம் 128-ம் பிரிவின்படியும் பயங்கர மான முறையில் 13 குற்றங்களை ஜோடித்திருந்தனர்.

சர்க்கார் தரப்பில் 106 சாட்சிகள் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர்; 178 சாட்சி எடுகள் காண்பிக்கப்பட்டன. சாட்சிப் பொருள்களாக 65 பொருள்கள் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டன.

39 நாள், தனி செஷன்ஸ் நீதிபதி முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

8 நாள் இரு தரப்பு வழக்கறிஞர்களும் வாதம் புரிந்தனர்.

சர்க்கார் தரப்பில் பி. சுப்ரமணியம் பிள்ளை என்ற 'பப்ளிக் பிராசிகியூடரும்,' திண்ணுபிரம் பிள்ளை என்ற உதவி பப்ளிக் பிராசிகியூடரும் வழக்கை நடத்தினர்.

இந்தப் பெரிய சதி வழக்கை உருவாக்கியவர், இதற்கென்றே, முன்னுள் முதன்மந்திரியான ஆச்சாரியாரால் நியமிக்கப்பட்ட பி. என். கிருஷ்ணய்யர் என்ற விசேஷ போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டராவார்.

நெல்லை மாவட்ட அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. ராதா கிருஷ்ண முதலியார், சதி வழக்கை விசாரணை செய்தார்.

இன்று அவர், குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 50 தோழர்களில் 25 தோழர்களை விடுதலை செய்தும், 25 தோழர்களுக்கு 3 மாதம் முதல் 2 வருடம் வரை கடுங்காவல் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்துள்ளார்.

"குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், ஜூலை 15-க்கு முன்பே கூடி, கொலை புரியவும், கொள்ளையடிக்கவும், பார்ப்பனர்களைத் தாக்கவும், இரயில் பாலங்களைக் கொளுத்தவும் சதியிலீடுபட்டார்கள் என்பதை என்னுல் நம்ப முடியவில்லை. சர்க்கார் தரப்பிலும் அந்தச் 'சதி' நிரூபிக்கப்பட முடியவில்லை.

"போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக யாருக்கேனும் சிலருக்கு ஆத்திரம் ஏற்பட்டிருக்கலாம்.

"தி. மு. கழகத்தின் திட்டப்படி 15-ந் தேதியன்று இரயில்களை நிறுத்துவதற்கு மட்டுமே தான், 14-ந் தேதியன்று இரவு கூடிப் பேசினுர்கள் என்று கருதுகிறேன்," என்று குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

விடுதலையடைந்த தோழர்கள்

கே. வி. கே. சாமி, எம். ரத்தினம், சீரங்கம், காந்திராஜ், பிச்சையா, ராமசாமி, முத்தையா, பொன்னுசாமி, ஆதிமுத்து, இரட்டைமுத்து, அருணுசலம், அருணுசல நாடார், அமலபுஷ்பம், ஜம்புலிங்கம், வேலாயுதம், மகாலிங்கம், அர்ஜுனமுத்து, மாடசாமி, சிவனணைந்த பெருமாள், ஏசுதாசன், சுப்பையா, வேலுச்சாமி, சண்முகையா, முருகையா, சித்திரவேலு.

தண்டனை விதிக்கப் பட்ட தோழர்கள்

மூன்று மாதம்:

இரா சு. தங்கப்பழம், எம். எஸ். சிவசாமி, வி. எம். நடராசன், கணபதி.

ஆறு மாதம்:

விசயராசன், வெங்கடாசலம், எம். சுப்பையா, ஜி. திருமால், சண்முகக்கனி, தங்கராஜ், துரைசாமி, முனியாண்டி, அந்தோணி, துரைசாமி, நடராசன், பொன்னு நாடார், எஸ். வடிவேலு.

ஒரு ஆண்டு:

எஸ். நடராசன், கே. ஆதிமுத்து, டி. தங்கசாமி, பொன்னுசாமி, எம். சீனிவாசன், ஜே. ராஜாமணி.

இரண்டு ஆண்டுகள்:

காசி நாடார், அருணுசல நாடார்.

★

தண்டனை விதிக்கப்பட்ட தோழர்களுக்கான ஜாமீன் மனுவை நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

சென்னை உயர் நீதிமன்றத்தின் மூலம் மேற்படி தோழர்களை வெளியில் கொண்டுவர முயற்சி எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

அதோடு, விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்து மேலும் வழக்கை நடத்துவதென தி. மு. கழகத் தலைமை நிலையம் முடிவு செய்திருக்கிறது.

தி. மு. கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக வழக்கறிஞர்களான தோழர்கள் பி.ஏ.தங்கசாமி நாடார், எம். நெல்லையப்பர், டி. டி. சுதர்சனம், என். சிதம்பரம், மின் பத்மினி மைக்கேல், பி.எல். சுந்தையா பிள்ளை, வி. என். சுந்தையா, ஏ. பி. ராஜா சிங் ஆகியோர் வழக்கை நடத்தினர்.

தி. மு. கழக முன்னணி வீரர்களில் ஒருவரும் வழக்கறிஞருமான இரெ. இளம்வழுதி, வழக்கின் ஆரம்பம் முதல் இறுதி வரை வழக்கிற்கான காரியங்களைக் கவனித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. வி. நாடிமுத்து பிள்ளை மறைவு

சென்னை சட்ட சபை உறுப்பினரும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பெருநிலக் கிழார்களில் ஒருவருமான, திரு. வி. நாடிமுத்து பிள்ளை கடந்த 26-ந் தேதி இரவு பட்டுக்கோட்டையிலுள்ள தமது இல்லத்தில், 55-வது வயதில் காலமானுர்.

திரு. வி. நாடிமுத்து பிள்ளை, தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக பல ஆண்டுகள் பணி புரிந்தவர்; பழைய சட்ட சபையில் உறுப்பினராகவும், பிரபல காங்கிரஸ்காரராகவும் இருந்தவர்;

அவரது மறைவு குறித்து வருந்தி, அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை பட்டுக்கோட்டை நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் ராமமூர்த்தி தெரிவித்திருக்கிருர்—நமது அனுதாபமும் உரித்தாகுக—(ஆ-ர்.)

'மலையாளி-தமிழன் என வேற்றுமை பாராட்டக் கூடாது'

'இன அடிப்படையில் திராவிட மொழியினர் ஒன்றுபட வேண்டும்'

தி. மா. மு. க. துவக்க விழாவில் எம். ஜி. ஆர்.

22—10—54-ல், திருவனந்தபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தை நடிகர் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாணவர்கள், தமிழன் - மலையாளி என்ற வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட வேண்டும்; இந்த ஒற்றுமையை வளர்க்க மாணவர்கள் உடனடிப் பிரசாரத்திலீடுபட வேண்டும். ஒரு மலையாளியான நான், தி. மு. கழகத்தில் சேர்ந்து பணியாற்றி வருவதிலிருந்து தி. மு. கழகம் எதாவது ஒரு வகுப்பினருக்கு மட்டும் சொந்தமானதல்ல என்பது நன்ருக விளங்கும்.

"நாம், நமது எதிர்கால சந்ததிகளின் நன்மையைக் கருதியேனும், பழைமையை எதிர்த்துப் போராட வேண்டும்.

"சீர்திருத்தம் பேசியவர்களுக்கு அக்காலத்தில் கல்லடியும், சொல்லடியும்தான் பரிசாகக் கிடைத்தது; ஆனால் எல்லா எதிர்ப்புகளையும் சமாளித்துக் கொண்டு தான் நமது இயக்கம் வளர்ந்திருக்கிறது—வளர்ந்து கொண்டு வருகிறது.

"தமிழன் - மலையாளி பிரச்சினையை அறவே மறந்து, தமிழனும், மலையாளியும், ஆந்திரனும், கன்னடனும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இந்த நல்ல காரியத்திற்கு நீங்கள் எல்லாரும் ஒத்துழைத்து ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டும்," என்ருர்.

கேரள மாநிலம் தேவை!

திரு-கொச்சி காங்கிரசார் கோரிக்கை!

கேரள மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்பதை வற்புறுத்தி திருவாங்கூர்-கொச்சி பிரதேச காங்கிரஸ், மாநிலப் புனரமைப்புக் குழுவிடம் அறிக்கை ஒன்று தந்திருக்கிறது.

இப்போதுள்ள திரு-கொச்சி மாநிலம், தென் கன்னடத்திலுள்ள காசர்கோட், குடகு, மலபார் மாவட்டம், கொச்சி துறைமுகம், கூடலூர், உதகமண்டலம், லக்ஷத் தீவுகள், மால் தீவுகள் இவைகள் அனைத்தும் கேரள மாநிலத்தில் சேர்க்கப்படவேண்டுமென்று அந்த அறிக்கையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு-கொச்சி பிரதேச காங்கிரசார் தமது அறிக்கையில், தாங்கள் கோரும் கேரள மாநிலம் தனி அரசியல் பகுதியாக கடந்த காலத்தில் விளங்கியதென்றும், இப்பகுதிகளில் சமூக, கலாச்சார, பொருளாதார ஒருமைப்பாடுகள் காணப்படுகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார்களாம்.

தடை தளர்ந்தது!

பிரெஞ்சிந்தியாவை அடுத்த தரங்கம்பாடி பிரதேச வரம்பில் உள்ள சுங்கச் சாவடிகளில் நியமிக்கப்பட்டிருந்த ஊழியர்கள், அவற்றை விட்டு வெளியேறிவிட்டனரென்றும், எனவே, அங்குள்ள எல்லைக் கட்டுப்பாடுகள் யாவும் ரத்து செய்யப்பட்டுவிட்டன என்றும் தெரிகிறது.

நீண்ட காலமாகவே கேரள மாநிலம் பற்றிய கோரிக்கை இருந்துவருகிறதென்றும், கோகர்ணம் முதல் குமரி முனை வரை தனி மாநிலம் தேவை என்றும் அவர்கள் அறிக்கையில் கோரியுள்ளார்கள்.

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 28—10—1954 வியாழன்

நமது இந்தி எதிர்ப்பு

இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சி மொழியாக இன்றுள்ள ஆங்கில மொழியை அகற்றிவிட்டு, பதினைந்து ஆண்டு காலத்திற்குள், அது இருந்த இடத்தில் இந்தி மொழியை அரங்கேற்ற வேண்டும் என, இந்திய அரசியல் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏதோ, காங்கிரஸ் கட்சியினருக்கு இந்த இந்தி மொழி வெறியில், அவர்களே பெரும்பான்மையினராகக் கூடி இயற்றிய அரசியல் சட்டத்தில், முன்பின் ஆராய்ந்து பார்க்காமல், ஆத்திர புத்தி கொண்டு, இந்திக்கு ஆட்சி மொழி அந்தஸ்து கொடுத்து விட்டார்கள்; இந்தியை ஆட்சி மொழி என ஏற்றுக் கொண்டதோடு நில்லாமல், அம்மொழி அரங்கேறுவதற்கான காலத்தையும் வரையறுத்து விட்டனர், காங்கிரஸ் கட்சியினர்.

எல்லாத் துறைகளிலும் ஓங்கி வளர்ந்து உலக மொழியாக உயர்ந்துள்ள ஆங்கில மொழியுடன், தனக்கென எழுத்துமில்லாது, கலை வளப்பமும் இல்லாது, இலக்கிய நலமும் இல்லாது, குப்பை மேட்டில் ஒதுக்கப்பட்டுக் கிடந்த இந்தி மொழியைப் போட்டியிட வைப்பது, பொருந்தாமுயற்சியில் நல்ல பலன் கிட்டுமா என்பதை எல்லாம் அக்காலத்தில் காங்கிரஸ் கட்சியினர் ஆராய்ந்து பார்க்காமல் கண்ணை மூடிக்கொண்டு அம்மொழிக்கு ஏற்றம் தேடிவிட்டனர்! ஆனால் இன்றோ, முன்னாள் செய்த மூடவினை பற்றி இப்பொழுது பலப்பல காங்கிரஸ் கட்சியினர் கவல்கிறார்கள். அக்கவலையை மனத்துக்குள் மறைத்து வைக்காமல், வெளிப்படையாக விரித்தும் புலம்புகிறார்கள்.

இராசகோபாலாச்சாரியார் போன்றவர்கள் கூட, இந்திக்கு ஆட்சிமொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டிருப்பதை வெளிப்படையாகக் குறைகூறவில்லையானாலும், ஆங்கிலத்திற்குப் பரிந்துபேசியும், இருநூறு ஆண்டுகளுக்கு அதிகமாக அம்மொழி இந்தியத் துணைக்கண்டத்தில் நுழைந்து வளர்ந்தோங்கி இருப்பதால், அம்மொழியையும் நமது சொந்த மொழியாகக் கொள்ளுவதில் தவறு இல்லை என வழக்காடுகிறார். ஆச்சாரியாரைக் காட்டிலும் ஆரிய வெறி தலைக்கேறியுள்ள கே. எம். முன்ஷி, ஆங்கிலத்தைக் கட்டிக்காக்கக் கர்ஜனை புரிந்த வண்ணம் உள்ளார். பல கல்வி நிபுணர்களும் ஆங்கிலத்தைப் பாட மொழியாக உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கட்டாயமாகக் கொள்ளவேண்டும் என அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர்.

பெரும்பாலான கல்வி நிபுணர்களின் கருத்தும், காங்கிரசிலுள்ள பல முக்கியஸ்தர்களின் கருத்தும் ஆங்கில மொழியை ஆதரிப்பதாக இருக்கவே, அரசியல் சட்டத்தில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை அந்த இடத்தில் அமர்த்துவதற்காக உறுதி செய்யப்பட்டுள்ள கால ஏற்பாட்டில் மாற்றம் செய்துவிடலாமா என்ற நினைப்பு ஏற்பட்டிருக்கிறது. இத்துறையில், பதினைந்து ஆண்டு என சட்டத்தில் குறிப்பிட்டிருப்பதற்குப் பதிலாக இருபது இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்குள் இந்தி இடம் பெறல் வேண்டும் என, சட்டத்தைத் திருத்தலாமா என்ற எண்ணமும் செய்தி உருவில் உலாவுகின்றன.

இந்தி மொழி அரியாசனம் ஏறுவது என்பது, இவ்வளவு இடர்பாடு உடையதாக இருக்கிறது. இதுவுமன்றி, இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள மொழிகளில் பதினான்கு மொழிகளை, அவை அவைகள் வழங்கப்பெறும் நிலப் பரப்பில் ஆட்சி மொழிகளாவதற்கு அருகதை உடையன எனவும், அதே அரசியல் சட்டம் அறிவிக்கிறது.

அரசியல் சட்டத்தின் ஏற்பாட்டைக் கொண்டு, ஒப்புக் கொள்ளப்பட்ட பதினான்கு மொழிகளும், மாநிலங்களின் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட்டால், அந்நிலையில், இந்தியுடன் சேர்த்து, இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள ஆட்சி மொழிகள் பதினைந்தாகிவிடும்!

மாநில ஆட்சி மொழி ஒன்று, இந்திய ஆட்சி மொழி ஒன்று, உலக மொழி ஒன்று, ஆக மூன்று மொழிகளைக் கற்க வேண்டிய கட்டாயம், இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கின்ற பாவத்திற்காக, நமது திராவிட இன மக்களுக்கு ஏற்படுகிறது. வடவர் ஆதிக்கத்திலிருந்து, திராவிடம் பிரிந்தால், இந்தியைக் கற்க வேண்டிய துன்பம் நம் மக்களுக்கு ஏற்பட இடமே இருக்காது. இம்மொழித் துறையைப் பொறுத்தும் வடவர் அரசியல் அமைப்பிலிருந்து நாம் பிரிய வேண்டியது இன்றியமையாதது என்பது விளக்கம். எனவே, நம்முடைய இந்தி எதிர்ப்பு, கட்டாய இந்தியை மட்டும் பொறுத்த விஷயமல்ல; இந்தி நுழைவில் உள்ள அரசியல் முக்கியத்துவத்தையும் பொறுத்துள்ளதாகும்.

'எஞ்சினீயர் ஒழுக்கக்கேட்டிற்கு முதுமை மணமும் ஒரு காரணம்'

'சட்ட சபை உறுப்பினர்களும் ஒழுக்கக் குறைவுக்கு அப்பாற்பட்டவர்களல்லர்'

ரூர்கி கலைக்கூட ஆய்வுக் குழுவினர் முடிவு

"அரசாங்க அலுவலாளர்களிடம் காணப்படும் ஒழுக்கக் கேட்டிற்கான காரணங்களில், அவர்களிடை பெருகிக் கொண்டே இருக்கும் முதுமைத் திருமணமும் ஒரு காரணமாகும்,"

என, எஞ்சினீயர்களிடம் இருந்துவரும் ஒழுக்கக்கேட்டைக் குறைப்பதற்கான வழிகளைக் காண, ரூர்கி கலைக்கூடத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு கண்டறிந்து கூறியிருக்கிறது.

அதிகாரிகள் புரிந்துகொள்ளும் முதுமை மணத்தின் விளைவுகளைக் குறித்து, அவ்வாய்வுக் குழு மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

இந்த முதுமை மணத்தின் விளைவாக, தாங்கள் உத்தியோகத்தை விட்டு விலக வேண்டிய பருவத்தில் அதிகாரிகள், பள்ளி செல்லும் அல்லது மணந்துகொள்ளும் வயதுடைய மக்களைப் பெற்றிருப்பவர்களாகின்றனர்.

எனவே, அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 55-லிருந்து 60-க்கு உயர்த்தினால், ஒழுக்கக் கேடு குறைய வழி பிறக்கும்.

குறிப்பிட்ட ஒரு அதிகாரி, தான் வாங்கும் ஊதியத்துக்கு ஒத்து இருக்காத வகையில், பகட்டாக வாழ்க்கை நடத்தி வருவாரானால், அவருடைய நடத்தை ஆராயப்பட வேண்டும்.

உத்தியோகங்களை ஏற்றுக் கொள்வதற்கு முன் தங்களுடைய அசையா பொருட்களை அதிகாரிகள் குறிப்பிட வேண்டுமென்ற சில ஏற்பாடு, மாநிலங்களில் இப்பொழுதும் நடைமுறையில் கையாளப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாடு போதியதாக இல்லை. ஒழுக்கங் கேடான அதிகாரிகள் பலர், தாங்கள் முறையில்லாத முறையில் ஈட்டிய பணத்தை, தொழில் பங்குகளிலும், பாங்கிகளிலும், தனி நபர்களிடம் வட்டிக்கு விட்டும் பொன் ஆபரணங்களாகவும், சேமித்து வைத்துள்ளனர். எனவே, தங்களிடமுள்ள அசையும் பொருளையும் அதிகாரிகள் அறிவிக்க வேண்டும் என விதி ஏற்படுத்த வேண்டும்."

இரண்டாம் வரிசையைச் சேர்ந்த நேர்மையான அரசாங்க உத்தியோகஸ்தர்கள், ஒழுக்கமில்லாத முதல் வரிசை உத்தியோகஸ்தர்களால், பலவித கொடுமைகளுக்கு உள்ளாக வேண்டி இருக்கிறது. பொய் வதந்திகளை அவர்கள்மீது, ஒழுக்கம் குறைந்த அதிகாரிகள் சுமத்தி வருகிறார்கள்.

ஒழுக்கக் குறைவான உத்தியோகஸ்தர்கள் சாதாரணமாக, மிக மிகத் திறமைசாலிகளாக உள்ளனர்; அவர்கள், தங்கள் நிர்வாகத்தில் சிறந்த முன்னேற்றத்தைக் காட்டி விடுகின்றனர். அதுவுமன்றி, மேல் அதிகாரிகளின் நல்லெண்ணத்தையும், அவர்களைப் புகழ்ந்தோ, அல்லது அவர்களுக்கு எடுபிடியாக இருந்தோ, அவர்கள் பெற்றுவிடுகிறார்கள். அதன் விளைவாக, அவர்களுக்கு உத்தியோக உயர்வும், நன்மதிப்பும் கிடைத்துவிடுகிறது.

தங்கள்கீழ் பணியாற்றும் யோக்கியமான பணியாளர்கள்மீது குற்றம் சுமத்தி, லஞ்சம் வாங்குவதில் பெயர் பெற்ற அதிகாரிகள் அனுப்பும் அறிக்கைகளை சர்க்கார் லட்சியம் செய்யக்கூடாது.

அதுமட்டுமின்றி, அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கைகூட எடுக்கலாம் என குழு கருதுகிறது.

யோக்கியமாக நடந்துகொண்டால், தகுந்த நன்மதிப்பு கிடைக்கிறதென்பதை ஊழியர்கள் உணர்ந்துகொண்டால், தொடர்ந்து ஒழுக்கமுடன் நடந்துகொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

லஞ்சம் வாங்குபவர்களைத் தண்டிப்பதற்காக உள்ள நடைமுறை மிக விரிவானதாகவும், காலந் தாழ்த்துவதாகவு மிருக்கிறது; இதனால் குற்றம் புரிந்தவர்கள் பொய்ச் சாட்சியம் தயாரிக்கவும், செல்வாக்குள்ளவர்களை நாடி குற்றத்தை மறைக்க முயலவும் சந்தர்ப்பமேற்படுகிறது.

சட்ட சபை உறுப்பினர்கள் இத்தகைய பழக்கங்களுக்கு அப்பாற்பட்டவர்களல்லர். லஞ்சக் குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த முயற்சிக்கும் சட்ட சபை உறுப்பினர்கள், தொடர்ந்து உறுப்பினராயிருக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று சர்க்கார் சட்டம் இயற்றவேண்டும் என்றும் குழு கருதுகிறது.

இலாகாக்களில் லஞ்சக் குற்றங்களை விசாரித்தறிவதற்காகவென்றே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்த வேண்டுமெனவும் குழு யோசனை கூறியுள்ளது.

எஞ்சினீயர்கள் ஒரு வகுப்பினராகவே கருதப்பட்டு, அவர்களெல்லோரும் லஞ்சம் வாங்குபவர்கள்தான்; லஞ்சம் பெறுதவர்கள் 'விதி விலக்கா'னவர்கள்—என்ற ஒரு கருத்து, 'லஞ்சம் வாங்கக் கூடாது' என்ற ஒரு பொது விதிக்கு மாறாக மக்களிடையே நிலவுகிறது.

இதை விசாரணைக் குழு ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, எஞ்சினீயர்கள்; வேறெந்த இலாகா அதிகாரிகளைக் காட்டிலும், அதிகமாகவோ, குறைவாகவோ லஞ்சம் பெறுபவர்கள் அல்லர்.

மேலும், எஞ்சினீயரிங் இலாகாவில் லஞ்ச ஊழல் தாண்டவமாடுவதைக் குறைக்க வழிகள் சிலவற்றையும் அறிக்கை விளக்கியுள்ளது.

அதில், உயர்தர அதிகாரிகள், தங்கள் கீழுள்ள சிப்பந்திகள்மீது தகுந்த கண்காணிப்பு வைத்திருக்க வேண்டுமென்பதும் ஒன்று.

சித்தூரில் ஒரு 'டால்மியாபுரம்' அமைக்க முயற்சி!

வட நாட்டு முதலாளிகள் தென்னாட்டில் சர்க்கரை ஆலைகள் ஆரம்பிக்கிறார்களாம்!

அனந்தசயனம் அய்யங்கார் தரும் தகவல்!

உத்திரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலை முதலாளிகளில் சிலர், சித்தூர் மாவட்டத்தில் சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை துவக்குவது குறித்து தம்முடன் கடிதப் போக்குவரத்து நடத்தி வருவதாக டெல்லி மக்கள் சபையின் உதவி சபாநாயகர் அனந்தசயனம் அய்யங்கார் சந்திரகிரி தாலூகா கரும்பு உற்பத்தியாளர் மாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

வட நாட்டு முதலாளிகள் புதியதாக சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்கவோ, அல்லது அங்குள்ள தொழிற்சாலைகளில் ஒன்றை சித்தூர் மாவட்டத்திற்கு மாற்றவோ கூடும் என்றும் அவர் தெரிவித்ததாகச் செய்தி வெளியாகியுள்ளது.

சினிமா கொட்டகைகளில் சிகரெட் பிடிப்பதை தடுக்கக்கூடாது!

சிகரெட் புற்று நோயை உண்டாக்குவதல்ல!

டாக்டர் பி. வி. செரியன் வாதம்

சென்னை சினிமா ரசிகர் சங்கத்தில் பேசுகையில், டாக்டர் பி. வி. செரியன், சினிமா கொட்டகைக்குள் புகை பிடிப்பது பற்றிக் குறிப்பிடுகையில், கூறியதாவது:—

"பிறருக்கு அது தீங்கு செய்யாதவரை அதைத் தடுக்கவேண்டியதில்லை; சிகரெட் பிடிப்பதினால், புற்று நோய் வருகிறது என்பதை நான் ஒப்புக்கொள்வதற்கில்லை—நான் ஒரு புற்றுநோய் நிபுணன் அல்ல என்றாலும் கூட!

தியேட்டர்களில் சுகாதார வசதிகள்தான் பூரணமாகத் தேவை; வெற்றிலை போட்டு கண்ட இடங்களில் எச்சில் துப்புவது, மூக்குப் பொடி போட்டு பொது இடங்களில் சளியை எறிவது — இவை எல்லாம் தடைசெய்யாமலிருக்கும் போது, சென்னைத் தியேட்டர்களில் சிகரெட் பிடிப்பது மட்டும் எப்படி சுகாதாரத்திற்குக் கெடுதியானதெனக் கொள்ள முடியும்?" என்றார்.

டாக்டர் பி. வி. செரியன் அவர்கள் மூக்கு, தொண்டை, காது போன்றவைகளில் வரும் வியாதிகளைக் குணப்படுத்துவதில் தனிப் பயிற்சி பெற்றவர்; சென்னை, மேல் (சட்ட) சபை தலைவர்; சென்னை நகர மேயராயிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரீஸ்டி:

இத்தாலி, யூகோ துருப்புகள் நிர்வாகமேற்றன!

டிரீஸ்டி பிரச்சினை குறித்து, மூன்று வாரங்களுக்கு முன்பு உருவான லண்டன் ஒப்பந்தப்படி, இத்தாலியத் துருப்புக்கள்டிரீஸ்டி துறைமுகத்துக்குள் புகுந்தன. அவை டிரீஸ்டி நிர்வாகப் பொறுப்பை, பிரிட்டிஷ், அமெரிக்கத் துருப்புக்களிடமிருந்து பெற்றுக் கொண்டன என்று தெரிய வந்துள்ளது.

யூகோஸ்லாவியத் துருப்புக்களும், ஒப்பந்தப்படி தங்களுக்குத் தரப்பட்டுள்ள பகுதிகளில் பொறுப்பேற்றன. இந்தப் பகுதிகளும், ஆங்கிலோ - அமெரிக்கத் துருப்புக்கள் வசமேயிருந்தன.

இதுவரை யூகோஸ்லாவியாவிடமிருந்த பகுதியும், இப்போது ஒப்பந்தப்படி கிடைத்துள்ள பகுதியும் யூகோஸ்லாவியாவின் நேரடி ஆட்சிக்கு உட்படுகின்றன. புதிய பகுதியில் சுமார் 3,000 பேர்கள் வாழ்வதாகத் தெரிகிறது.

யூகோஸ்லாவியா மக்கள் சபை டிரீஸ்டி பற்றிய ஒப்பந்தத்தையும், பால்கன் கூட்டு ஒப்பந்தத்தையும் ஏகமனதாக ஆதரித்து ஓட்டளித்ததாகத் தெரிகிறது.

மேற்கு ஐரோப்பிய யூனியனுடன் யூகோ, கிரீஸ், துருக்கி ஆகிய நாடுகள் ஒத்துழைக்க வேண்டுமென, மக்கள் சபையில், யூகோ குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ குறிப்பிட்டதாகவும் தெரிகிறது.

'கருணாநிதி'

சென்னை, அக். 24—

சென்னை மீர்சாகிப்பேட்டையில் அழகிரி நாடக மன்ற துவக்க விழாவின்போது. 43-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் மு. புரட்சிமணி அவர்களின் தமக்கையாரின் ஆண் மகவுக்கு தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்களால் 'கருணாநிதி' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுரியது — பொறுப்பாளர்.

துறைமுகத் தொழிலாளர் உரிமைப் போர்!

இங்கிலாந்தின் வியாபாரத்திற்கு நெருக்கடி?

55,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின் விளைவு!

இங்கிலாந்தின் மிகப் பெரிய, சரித்திரம் காணாத துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

அரசாங்கம் வேலை நிறுத்தத்தைக் கைவிடுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு தொழிலாளர்கள் செவி மடுக்கவில்லை.

சில தொழிலாளர்கள் மட்டும் வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர்; என்றாலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளனர்.

அதிக நேரம் வேலை செய்வதென்பது கட்டாயப்படுத்தப்படக் கூடாது; தொழிலாளர்கள் தாங்களாகவே பிரியப்பட்டால் அதிக நேரம் வேலை செய்யலாமென்றிருக்க வேண்டுமென்பதே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் முக்கியமான கோரிக்கையாகும்.

பிரிட்டனின் தேயிலை வியாபாரத்தில் மூன்றில் இரண்டு பங்கு நின்று போய்விட்டது; சுமார் 14½ கோடி பவுன் பெறுமான பொருள்கள் கப்பல்களிலேயே தூங்குகின்றன.

ஒவ்வொரு துறைமுகத்திலும் இன்றுள்ள நிலை வருமாறு:—

லண்டன்:
27,000 தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கின்றனர்; 155 - கப்பல்கள் தூங்குகின்றன; சுமார் 100 கப்பல்களில் வேலை செய்யும் 8,000 பழுது பார்க்கும் தொழிலாளர்களும் வேலை செய்யவில்லை.

லிவர்பூல்:
10,200 தொழிலாளர் வேலை நிறுத்தம்; 71 கப்பல்கள் தூங்குகின்றன.

பிரிக்கன் ஹெட்:
1,800 தொழிலாளர்கள்; 15 - கப்பல்கள்.

ஹல்:
2,700 தொழிலாளர்கள்; 31 - கப்பல்கள்.

கார்ஸ்டன்:
740 தொழிலாளர்கள்; 21 - கப்பல்கள்.

ரோசெஸ்டர்:
200 தொழிலாளர்கள்; 5 கப்பல்கள்.

சௌதாம்டன்:
1,900 தொழிலாளர்கள்; 16 - கப்பல்கள்.

இந்த வேலை நிறுத்தம் தொடருமானால் பிரிட்டனில் உணவுப் பொருள்களுக்கும் பெரும் நெருக்கடி ஏற்படலாமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

சோமசுந்தர பாரதியாருக்கு 'டாக்டர்' பட்டம்

அண்ணாமலை சர்வகலாசாலை வழங்கும்

மதுரையைச் சேர்ந்த சோமசுந்தர பாரதியாருக்கு, அண்ணாமலை சர்வகலாசாலைக் குழு, 'டாக்டர்' என்ற கவுரவப் பட்டம் வழங்க முடிவு செய்திருப்பதாகவும், இந்தப் பட்டமளிப்பு நிகழ்ச்சி, வருகிற டிசம்பர் திங்களில் நடைபெறவிருக்கும் அண்ணாமலை சர்வகலாசாலையின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது நடைபெறும் என்றும் தெரிகிறது.

மேலும், மைசூர் ராஜப்பிரமுகர், இந்திய உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், சர். சி. பி. ராமசாமி ஐயர், செட்டிநாட்டு ராஜா முத்தையா செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் சாமுவேல் ரங்கநாதன் ஆகியோருக்கும், இது போன்ற கவுரவப் பட்டங்கள் அளிக்கப்படுமாம்.

உங்களுக்குத் தெரியுமா?

கேள்விகள்:

1. பெரிய நதிகளின் அபிவிருத்தித் திட்டங்களின் மூலம், புதிதாக எவ்வளவு நிலம் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது?
   (அ) நாளொன்றுக்கு 25,000 ஏகரா வீதம்;
   (ஆ) வாரத்துக்கு 25,000 ஏகரா வீதம்;
   (இ) மாதத்துக்கு 25,000 ஏகரா வீதம்.
2. இந்தியத் தபால் போக்குவரத்து மார்க்கங்களில் மொத்த தூரம் 1,60,000 மைலில், சுமார் பாதி தூரத்துக்கு தபால்கள் எப்படி எடுத்துச் செல்லப்படுகின்றன?
   (அ) மோட்டார் வண்டிகள், தபால்வண்டிகள் மூலம்;
   (ஆ) ரயில்வேக்கள மூலம்;
   (இ) அஞ்சலோடிகள், சிறு படகுகள் மூலம்.
3. சர்க்காருக்குச் சொந்தமான சித்தரஞ்சன் எஞ்சின் உற்பத்தி சாலையில் 1954 மார்ச்சுடன் முடிந்த மூன்று ஆண்டு காலத்தில், எத்தனை இரயில் எஞ்சின்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன?
   (அ) 87 ரயில் எஞ்சின்கள்;
   (ஆ) 114 ரயில் எஞ்சின்கள்;
   (இ) 268 ரயில் எஞ்சின்கள்;
4. இந்திய நிலக்கரிகள் பற்றி விரிவான பௌதிக - ரசாயன ஆராய்ச்சிகளை நடத்திவரும் எரி பொருள் ஆராய்ச்சிக்கூடம் எங்கு உள்ளது?
   (அ) தான்பாதில்;
   (ஆ) ஜாம்ஷெட்பூரில்;
   (இ) பெங்களூரில்.
5. 1950—51-க்குப் பிறகு, அம்மோனியம் சல்பேட் உர உற்பத்தி எவ்வளவு அதிகரித்துள்ளது?
   (அ) 200 சதவிகிதம்;
   (ஆ) 400 சதவிகிதம்;
   (இ) 600 சதவிகிதம்.

விடைகள்:

1. (அ); 2. (இ); 3. (ஆ); 4. (அ); 5. (இ) உற்பத்தி 46,000 டன்னிலிருந்து 2,61,000 டன்னுக்கு அதிகரித்திருக்கிறது.

'முதியோர் கல்வித் திட்டம் தோற்றது'

செங்கல்பட்டு மாவட்ட முதியோர் கல்விக் குழு தகவல்

"பொதுவாக எல்லா மாவட்டங்களிலும் தற்போதைய முதியோர் கல்வித் திட்டம் ஏற்புடையதாக இல்லையென்பதை சர்க்காரே கண்டு கொண்டிருக்கும்போது, கிராம அபிவிருத்தித் திட்டங்களில் மட்டும் அந்த முதியோர் கல்வித் திட்டத்திற்கான முயற்சிகளை அமுல் நடத்த முயற்சிப்பதினால் மேலான பலன் ஏதும் கிடைத்துவிட வகை இல்லை."

—இவ்வாறு சென்னை சைதாப்பேட்டையில், கலெக்டர் லோபோ பிரபு தலைமையில் நடைபெற்ற செங்கல்பட்டு மாவட்ட முதியோர் கல்விக் குழு தெரிவித்திருக்கிறது.

மேற்படி குழு, கல்வி வெற்றிக்கான மார்க்கத்தைப்பற்றி குறிப்பிட்டுள்ளது:—

"இதுவரை கைக்கொள்ளப்பட்ட முதியோர் கல்வித் திட்டம் தோல்வியுற்றதேன் என்பதை ஆலோசிப்பது அவசியம். தோல்வியுற்றதை மீண்டும் வெற்றிகரமாக்க அபிவிருத்தித் திட்டப் பகுதிகளில் எத்தகைய சூழ்நிலை காணப்படுகிறது என்பதும் தெரியவேண்டும்.

"கல்வி போதிப்பதைவிட தகவல் தெரிவிக்கும் நிலையங்களாக அப்பள்ளிகளை மாற்றினால் மக்கள் சுலபமாக முன் வந்து அவற்றை ஏற்றுக் கொள்வர். இதற்கு ரேடியோ, பத்திரிகை,சங்கீத வாத்தியங்கள் முதலியன பயன்பட்டு முதியோர்களின் கவனத்தை அதிகமாகக் கவரக் கூடும். எல்லா கிராமங்களிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்துவது சாத்தியப்படாது போனால், ஸ்தல நன்கொடைகள் தரப்படும் பகுதிகளில் மட்டும் முதலில் இதை ஆரம்பிக்கலாம்.

மேலும் அந்தக் குழு, 'நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச எண்ணிக்கைக்கும் குறையாமல் முதியோர் வந்து படித்தால்தான், அந்தப் பள்ளிகளுக்கு சர்க்கார் மானிய உதவி அளிக்கவேண்டும்; முதியோர்களுக்குக் கல்வி புகட்டுவதுதான் சர்க்காரின் நோக்கமானால், அந்தப் பள்ளிகளில் சேருவோருக்கு வயது வரம்புகள் ஏதும் நிர்ணயிக்கக் கூடாது,' என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது.

வங்க மாநில சட்டத்தின் கீழ்...

சந்திரநாகூர் ஆட்சி புரியப்படும்

மேற்கு வங்க சர்க்கார் வெளியிட்டுள்ள உத்தரவு ஒன்றின்படி பிரெஞ்சிந்தியப் பகுதியாக இருந்த சந்திரநாகூர், இனி, மேற்கு வங்க சட்டத்தின் கீழ் ஆட்சி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர் இரண்டாம் தேதியிலிருந்து இந்த உத்தரவு அமுலுக்கு வருகிறது.

இதுவரை சந்திரநாகூரில் அமுலிலிருந்த சட்டங்கள் அனைத்தும் ரத்து செய்யப்படுகின்றன.

சந்திரநாகூர் நகரசபையின் நிர்வாகம், 1932-ம் ஆண்டு வங்காள நகரசபை சட்டத்தின்படி ஆட்சி செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

[குறிப்பு:—பிரெஞ்சுப் பிடியிலிருந்து விடுதலை பெறுகிற புதுவை, காரைக்கால் பகுதிகள் இந்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சியின் கீழ் வரும் வகையில் 'சி' பிரிவு மாநிலமாக உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகத் தெரிகின்றது—ஆ-ர்.]

பாக். பிரதமரைக் கொல்லச் சதி?

பாகிஸ்தான் பிரதமர் முகம்மதலி அமெரிக்கா செல்லும் வழியில் லண்டனில் தங்கும்போது அவரைக் கொல்ல சதி ஒன்று உருவானதாக லண்டன் போலீசார் நம்புவதற்கு இடமிருந்ததென்ற செய்தி வெளியாகியுள்ளது.

மூன்று வாரங்களுக்கு முன், இரண்டு பாகிஸ்தானியர்கள் கராச்சியிலிருந்து லண்டன் வந்தனர். அவர்கள் இருவரும், முன்பு, ஜனாப் லியாகத் அலிகானை கொலை செய்த அரசியல் குழுவினரைச் சேர்ந்தவர்கள் என லண்டன் ரகசிய போலீசாருக்குத் தெரிந்ததாம்; உடனே அவர்கள், பாகிஸ்தான் தூதுவராலயத்திற்கு இந்த நபர்களின் லண்டன் வருகைகுறித்துத் தகவல் அனுப்பி, முன்னெச்சரிக்கை விடுத்திருந்தனராம்.

பின்னர், ஏற்கனவே இருந்த ஏற்பாடுகளுக்கு மாறாக, முகமதலி, லண்டனில் தங்கப்போவதில்லை என்றறிந்ததும், அந்தபாகிஸ்தானியர்களும், கராச்சிக்குப் பயணமாகி விட்டனராம்.

பிறப்பு

சென்னை செம்பியம் 20-வது வட்ட தி. மு. கழகத் தோழர் சோ. ஜகதீசன் அவர்களின் துணைவி விஜயலட்சுமி அம்மையார் 20—10—54ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுரியது—பொறுப்பாளர்.

* * *

மாயூரம் நகர தி. மு. கழக பொருளாளர் தோழர் வி. சங்கையன் அவர்களின் துணைவியார் தோழியர் பார்வதி அம்மையார் 19—10—54ல் ஒரு பெண் மகவுக்குத் தாயாரானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றியுரியது — பொறுப்பாளர்.

கூட்டுறவு விவசாயப் பண்ணை

தஞ்சை மாவட்டத்தில் முதல் முயற்சி

தஞ்சை, அக். 27—

தஞ்சை மாவட்டத்தில் முதன் முறையாகக் கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யப்படும் என்று தெரியவருகிறது. கூட்டுறவு விவசாயப் பண்ணைக்காக என்று உக்கடைத் தேவர் 500 ஏகர் நிலம் ஒதுக்கியுள்ளார் என்று தெரிகிறது.

சென்னை சர்க்கார் கூட்டுறவு இலாகா அதிகாரிகள் இப்பகுதிக்கு அனுப்பப்படுவார்கள் என்றும், அவர்கள் கூட்டுறவு முறையில் பண்ணை நடத்த திட்டங்களை வகுப்பார்கள் என்றும் தெரிகிறது.

'அன்னிய மொழியான ஆங்கிலத்தை ஒதுக்குவோர்...'

'பிற மொழியான இந்தியை ஏற்பது ஏனோ?'

'இந்திக்கு சொந்தத்தில் எழுத்துக்கள் கிடையா'

'இந்தித் திணிப்பால் இந்திய ஒற்றுமைக்கே உலை'

"ஆங்கிலம் அன்னியர் மொழியாதலால், அது வேண்டாம்; ஒதுக்கித் தள்ளுவோம் என்று கூறுகிறோம்; ஆனால், இந்தியும் ஒரு காலத்தில் வேறு நாட்டினரின் மொழியிலிருந்து பிறந்தது தான் என்பதை மறந்து விடுகிறோம்; ஆங்கிலமாவது எழுத்திலக்கணத்தை உடையது; ஆனால், இந்திக்குத் தனக்கென்று சொந்தமான எழுத்துக்கள் கூட இல்லை.

"இந்தியைப் படிக்குங்கால் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற பாகுபாடுகள் பிறமொழியாளர்களுக்குத் தலைவலி தருகின்றன. வடமொழிச் சொற்களும், உருதுமொழிச் சொற்களும் அதில் மிகுதியாகக் கலந்திருப்பதால், இப்பொழுது கிடைக்கும் அகராதிகளில் அதற்குத் தகுந்த உரை காணப்படுவதில்லை.

"இந்தி, ஏதோஒரு வலிமையான பெரும்பான்மையினருக்குச் சொந்த மொழியாதலால், அவர்கள் இதனை வற்புறுத்தித் தேசிய மொழியாக்கி, இந்தியாவின் ஒற்றுமைக்கே உலை வைக்க முயலுகிறார்கள்.

"மூன்று மொழிகளைக் கற்க மக்களால் முடியாது என்பதில் ஐயமில்லை. ஆங்கிலத்தையே இந்தியப் பேரரசில் அரசாங்க மொழியாக்கி, தாய் மொழியை மாநில அரசாங்க மொழியாக்கினால், இன்று, நாட்டிலுள்ள வெறுப்பு மனப்பான்மை மறைந்து ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படும்; ஒரு மொழியாளருக்குத்தான் பேரரசு சலுகை தருகிறதென்னும் மனப்பான்மையும் மாறும்.

"அரசியல் மொழி இந்தியாக இருக்கவேண்டுமென்று 'கூறுவதால், எல்லா மொழிகளுக்கும் ஒரே வகையில் எழுத்துக்கள் அமைய வேண்டுமென்ற கருத்தும் இடம் பெறுகிறது.

"ரோம லிபியையே எல்லா மொழிக்கும் பயன்படுத்தல் நலம் என்ற கருத்து ஏற்படுமானால், இந்தியை ரோம லிபியில் எழுதுவதைக் காட்டிலும் ஆங்கிலமே இருந்துவிடுவது நல்லதல்லவா?

"இந்திய அரசியல் சட்டம், மற்றும் உயர்நீதி மன்றம் முதல் எல்லா நீதிமன்றங்களிலும் ஆங்கிலம் தான் நிலவிவருகிறது. நீதிமன்றங்களில், மொழியின் பயிற்சி மிகவும் அவசியம் ஆகையால், இந்தி பரவுவதால் மற்ற மாநிலங்களின் நிலை மோசமடையும். ஆகையினால் எல்லா இடங்களிலும், மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் வட்டார மொழியும், பேரரசு சம்பந்தப்பட்ட வரையில் ஆங்கிலமும் அரசில் மொழியாக நிலவினால், இன்றுள்ள பிரிவு மனப்பான்மை மறைந்து, 'ஒரே இந்தியா' என்ற எண்ணம், எல்லா மக்கள்பாலும் எழும். ஆங்கிலமும் இந்திய மொழிகளில் ஒன்று என்பதை நாம் பலமுறை வற்புறுத்திவந்துள்ளோம். இங்குள்ள ஆங்கிலோ—இந்தியர், பார்சிகள் மற்றும் தாய் மொழியில் பயிற்சியற்றுப் பிற மாநிலங்களில் சென்று வாழும் மக்கள் முதலியோர் ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டிருக்கின்றனர்.

"கால வழக்கில், இந்திய மொழியாகிவிட்ட ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதே முறை. இதில் வெறுப்புக் காட்டினால் அனைத்திந்தியக் கொள்கைக்கு ஊறு நேரிடும்."

—'தமிழ் நாடு' (தலையங்கம்)
25-10-54

மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர்!

பாக். அரசியல்வாதிகள் மீது கராச்சி இதழின் குற்றச்சாட்டு

"நாட்டின் வாழ்க்கையில் காணப்பட்ட ஒழுங்கீனங்களுக்கு அதிசயிக்கத்தக்க முறையில் கவர்னர் - ஜெனரலின் நடவடிக்கை தடைவிதித்திருக்கிறது,"

என்று பாகிஸ்தான் அரசியல் நிர்ணயசபை கலைக்கப்பட்டதைப் பற்றி கராச்சி இதழான 'மார்னிங் நியூஸ்' தெரிவித்திருக்கிறது.

"நாடு காப்பாற்றப்பட்டது" என்ற தலைப்பின் கீழ் அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"அரசியல் நிர்ணய சபையின் உள்ளே நடைபெற்ற போராட்டங்கள் ஒரு மாகாணத்தையும், மற்றொரு மாகாணத்தையும் மோதவிட்டுவிட்டது; ஒரு கட்சிக்கும், மற்றொரு கட்சிக்கும் இடையே சச்சரவுகளை உண்டாக்கிவிட்டது. நாடு கொஞ்சம் கொஞ்சமாக சிதறுண்டு வருகிறது; அரசியல் வாதிகளின் ஒழுங்கீனமான போக்கினால் விழுங்கப்படும் சாதாரண மனிதன் இன்று சுவற்றின் ஓரத்திற்கு தள்ளப்பட்டுவிட்டான்; இப்போது நாடு தன்னைத் தானே கொன்று போடும் மனப்பான்மையிடம் சிக்கிவிட்டது.

இன்று சாதாரண பாகிஸ்தானி ஒருவன், பயங்கரமான முறையில் ஏதும் புரியாத நிலையில் செயலற்றுப் போயிருக்கிறான். தன்னுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் வாதிகள் அவனை இன்று காட்டிக்கொடுத்துவிட்டனர்; உயர்ந்துகொண்டே போகும் விலைவாசிகள், கீழ்த்தரமான எண்ணங்கள், லஞ்சம் என்னும் நோய்களிடையே அவனை இந்த அரசியல் வாதிகள் தள்ளிவிட்டனர்."

சர்க்காரை ஏமாற்றி பணம் கொள்ளை!

பக்ரா-நங்கல் அணைக்கட்டு அதிகாரிகள்-காண்ட்ராக்டர்கள் கூட்டுச் சதி?

ஒருவர் கைது செய்யப்பட்டார்!

அம்பாலா, அக். 27—

பக்ரா நங்கல் அணைக் கட்டுத் திட்டத்தில் வேலை பார்க்கும், சர்க்கார் சிப்பந்திகளும், காண்டிராக்டர்கள் சிலரும் கூடி, சர்க்கார் பணத்தை மோசடி செய்யவும், பொய்க் கணக்குக் காட்டி, பணம் கொள்ளையடிக்கவும் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு, ஒரு உதவி அதிகாரியான சத்ய தேவ் கன்னு என்பவரை போலீசார் கைது செய்துள்ளதாகத் தெரிகிறது.

சர்க்கார் பணத்தைத் தவறான முறையில் கையாடல் செய்ய முயன்றதாகவும், அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

சர்க்கார் குறிப்பேடுகளில் எழுதப்பட்டிருப்பவற்றை அழித்துவிட்டு, புதியதாக திருட்டுக்கணக்கு எழுதுவதின் மூலம், கண்டிராக்டர்கள், போலிப் பட்டியல்களைக்காட்டிப் பணம் பெற்று சர்க்காரை ஏமாற்றிய சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பதாகச் சொல்லப் படுகிறது.

சத்திய தேவ் கன்னு, நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிகிறது.

இலங்கை - அமெரிக்க ஒப்பந்தம்!

ஏற்படாது என மறுப்பு!

இலங்கையும், அமெரிக்காவும் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ளும் என்று வெளியான செய்திகளை இலங்கை வெளிநாட்டிலாகா செயலாளரான குணசேன திசோய்சா மறுத்தார்.

அண்மையில் அமெரிக்கா செல்லும்போது இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, அமெரிக்காவுடன் நட்புறவு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடுவார் என்று செய்திகள் வெளியாயின. இதை மறுத்துப் பேசுகையில் குணசேன 'பிரதமர் ஏதேனும் ஆட்டோகிராப் புத்தகங்களில் கையெழுத்திடுவார் என்றுதான் தெரிகிறது' என்று கூறினர். கொத்தலாவலை அடுத்த மாதம் அமெரிக்கா புறப்படுவார் என்று தெரிகிறது.

பம்பாய்க்கு பால் பவுடரை கடத்த முயற்சி!

சென்னையில் பறிமுதல்!

சுமார் ரூ.1,500 பெறுமானமுள்ளதும், 12, மர பெட்டிகளில் வைக்கப்பட்டிருந்ததுமான ஆடை எடுத்த பால் பவுடரை சென்னை சென்ட்ரல் ரயில்வே போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

அந்த பால் பவுடர் பம்பாய்க்கு அனுப்பப்படுவதற்காக, உள்ளே, கம்பளி இருப்பதாகச் சொல்லப்பட்டு, பீச் ஸ்டேஷனிலிருந்து பம்பாய்க்கு விலாசமிடப்பட்டு அனுப்பப்பட விருந்ததாம்.

பம்பாய்க்கு பால் பவுடர் அனுப்பப்படுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவேதான் சந்தேகப்பட்ட போலீசார், பார்சலை உடைத்துப் பார்த்து, பால் பவுடர் இருப்பதைக் கண்டு அவற்றை பறிமுதல் செய்துள்ளனர் என்று தெரிகிறது.

ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்!

போலந்து நாட்டில், பிரெஸ்லாவ் சரிவாயுத் தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒரு பெண் ஒரே பிரசவத்தில் 4 ஆண் குழந்தைகளைப் பெற்றுள்ளாராம்! தாயும், சேய்களும் நலமாக இருக்கின்றனர் என வார்ஸா வானொலிச் செய்தி தெரிவித்துள்ளது.

மே. வங்க உயர்நிலைக் கல்விக் குழு!

அறிக்கை தயார்

கல்கத்தா, அக். 24—

சர்க்கார் உதவி பெற்றதும், உதவி பெருததுமான உயர்நிலைப் பள்ளிகள் பற்றி விசாரணை செய்ய மேற்கு வங்க சர்க்கார் நியமித்த உயர்தரக் குழு தனது அறிக்கையைத் தயார் செய்துவிட்டது என்று தெரிகிறது.

இக்குழுவினர், 50 பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்: 80 பேர்களை சாட்சிகளாக விசாரணை செய்தனர் என்று தெரிகிறது.

மேற்கு வங்க சர்க்கார், உயர்தரக் கல்வி பற்றிய லட்சுமணசாமி முதலியார் குழுவினரின் கருத்துக்களை ஒப்புக்கொண்டிருக்கிறது என்றும் தெரிகிறது.

இக்குழுவினரின் அறிக்கை மேற்கு வங்கக் குழுவினரின் பணியைச் சுலபமாக்கியது என்று தெரிகிறது.

மேற்கு வங்கத்தில் முன்னாள் லீக் ஆட்சியினால் ஏற்பட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்பவும், அகதிகள் குழந்தைகளினால் ஏற்பட்டுள்ள கல்வி நெருக்கடியைச் சமாளிக்கவும் வேண்டிய பொறுப்பு மேற்கு வங்க உயர்தரக் கல்விக் குழுவிற்கு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கழகக் கூட்டம்

★

பந்தநல்லூர்

தி. மு. கழகத் துவக்க விழா

பட்டி மைதானத்தில்

30—10—54 மாலை 5 மணிக்கு

தலைவர்: என். தமிழ்ச்செல்வம்

பேசுவோர்:

அ. பொன்னம்பலனார்

ம. கோ. மணி

கே. கோவிந்தராசு

கே. எஸ். பாண்டியன்

3-ம் ஆண்டு நினைவு நாள்

29—10—54 காலை 9 மணிக்கு சென்னை, வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகக் கட்டிடத்தில். கே. எஸ். பாண்டியன் மூன்றாம் ஆண்டு நினைவு நாள் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெறும். மறைந்த மாவீரர் கே. எஸ். பாண்டியன் உருவப் படத்தை, தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் திறந்து வைப்பார்.

மதம் வேண்டாம் என்போர் - வெளியேறிவிட வேண்டுமாம்

மத நம்பிக்கை அற்றவர்களுக்கு தென்னிந்தியாவில் இடமில்லையாம்

ஆச்சாரியார் தனது 'வன் நெஞ்சை'த் திறந்து காட்டுகிறார்

சென்னை, அக். 28—

"பல மதங்களைக் கொண்ட நமது நாடு—பல மலர்களைக் கொண்ட நந்தவனம் போன்றது; ஒரு மலருக்கும் மற்றொன்றுக்குமிடையே நாம் எவ்வித வித்தியாசமும் கண்டுபிடிக்கக்கூடாது."

"இந்தியாவிலுள்ள இந்த மலர்களான மதங்களெல்லாம் மிகவும் பழமையானவை. கடவுள் எல்லா மலர்களையும் தாம் விரும்புவதாகச் சொல்லியிருக்கிறார்........சென்னையில் எல்லா மலர்களும் நன்கு வைக்கப்பட்டுள்ளன."

"ஒரு மதத்திற்கும் மற்றொரு மதத்திற்குமிடையே இங்கு சண்டை கிடையாது; ஆனால், ஒரு சண்டை மட்டும் உள்ளது. அதுதான், எங்களுக்கு எந்த மலருமே தேவை இல்லை என்பது போன்று, 'எந்த மதமும் எங்களுக்குத் தேவை இல்லை' என்று சொல்பவர்களின் சண்டை. நாம் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல; நாம் எல்லா மலர்களையும் விரும்புகிறோம், எந்த மலருமே வேண்டாமென்பவர்கள் வேறு எங்காவது போய்விடலாம். **மத நம்பிக்கையற்றவர்களுக்கு தென்னிந்தியாவில் இடமில்லை."**

—என்று, சென்னைமுன்னாள் முதன் மந்திரி ஆச்சாரியார், நேற்று, தங்கசாலையில் நடைபெற்ற ஜைனர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

ஜைனர்களாகிய உங்களிடை நான் பேசுகிறேன். உங்கள் மதம் எதுவாயிருந்தாலும் நான் உங்களைச் சென்னையைச் சேர்ந்தவர்கள் என்றே கருதுகிறேன். நீங்கள் வேறுவிதமாக தலைப்பாகை அணிவதால் நீங்கள் சென்னையைவிட்டுச் செல்லவேண்டுமென்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்; நான் அப்படிச் சொல்லமாட்டேன். உலகின் எல்லா பாகங்களிலிருந்தும், மக்கள் இங்கு வந்ததால் சென்னை அதிக அழகுவாய்ந்ததாக இருக்கிறது.

"நீங்கள் வெகுநாட்களுக்கு முன்பே உங்கள் இடத்தை விட்டு வந்து விட்டீர்கள்."

"சாந்தி மண்டபத்துக்கு நீங்கள் விதிதாசரப்படி நன்கொடையளிக்கவேண்டும், இல்லாவிடில், நீங்கள், எங்கள் பணத்தை எல்லாம் உங்கள் நாட்டுக்கு அனுப்பி விடுவதாக மக்கள் நினைப்பார்கள்."

நகரசுத்தித் தொழிலாளர்களை சிங்களவர்கள் தாக்கினர்?

கொழும்பு மேயரிடம் முறையீடு

கொழும்பு, அக். 27—

கொழும்பு நகரசபைத் தலைவ (மேயர்)ரிடம், இலங்கைவாழ் இந்திய நகரசுத்தித் தொழிலாளர்கள் பலர், தாங்கள் வேலை செய்து கொண்டிருந்த சமயத்தில், ஒரு சிங்களக் குழுவினரால் தாக்கப்பட்டதாகவும், அந்தச் சிங்களவர்கள், தங்களை உடனடியாக இந்தியாவுக்குப் போய்விடுங்கள் என்று கூறி மிரட்டியதாகவும் தெரிவித்து, இதற்குத் தக்கதோர் நடவடிக்கையினை மேயர் மேற்கொள்ளாவிடில் தாங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போவதாகவும் தெரிவித்தனராம்!

இதைப் பற்றி மேயர் விசாரித்துப் பார்த்ததில், இந்தியத் தொழிலாளிகளைத் திரி—சிங்கள—பேராமுன(இந்திய எதிர்ப்புக் காரர்கள்)வைச் சேர்ந்தவர்கள் தாக்கினார்கள் என்பது தமக்கு நம்பிக்கையாகத் தெரியவருகிறது என்று கூறியிருக்கிறார்.

இந்த விஷயத்தில் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீசாரை வற்புறுத்தியதுடன், இவ்விவகாரத்தைப் பற்றி இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலையுடன் பேசவிருப்பதாகவும் கூறியிருக்கிறார்.

1,000 பேர் பலி!

கடும்புயலின் விளைவு!

தெற்கு இத்தாலியின் சாலர்னோ பகுதியில் ஏற்பட்ட கடும்புயல், மழை இவற்றின் விளைவாக பல இடங்களில் நிலச் சரிவுகள் ஏற்பட்டு, பல்லாயிரக் கணக்கான வீடுகள் இடிந்து விழுந்து விட்டதாகவும், இந்த ஆபத்தில் சுமார் 1,000-பேர் மாண்டு போயினர் என்றும். அனேகம் பேர் காணமற் போய் விட்டார்கள் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

காவி உடையில் கள்வர்கள்!

இராஜஸ்தானிலிருந்து ஆந்திராவிற்குள் ஊடுருவல்?

கதவை உடைத்துக் களவாடின ஆறு சாதுக்களுக்குத் தண்டனை

இராஜஸ்தான் பகுதியிலிருந்து ஆந்திராவில் ஊடுருவியுள்ள காவியுடை அணிந்த ஆறு கள்வர்களுக்கு, பூட்டை உடைத்து வீட்டுக்குள் நுழைதல், வீட்டுக்குடையவரை தாக்குதல், பொருட்களைக் கொள்ளையிடல் என்ற குற்றங்களின்கீழ், ஓராண்டு கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளோன விடுவிக்கப்பட்ட மூன்று சாதுக்கள், வேறு ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராயதுர்க்கம் என்ற ஊரில் இராஜஸ்தானில் இருந்து வந்துள்ள காவியுடை கள்வர்களில் சிலர், ஜனவரி மாதம் முதல் வாரத்தில் பகலில் பிச்சை கேட்டும், இரவில் வீடு நுழைந்து களவாடியும் வந்துள்ளனர். 3-ம் நாள் இரவு அப்துல் கரீம் என்பவர் வீட்டுக் கதவை உடைத்துக்கொண்டு, உள் நுழைந்து, அவரையும் காயப்படுத்தி, நகை, ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர் என்பது குற்றச்சாட்டு.

குற்றம் சுமத்தப்பட்ட சாதுக்கள், மறுநாள் ராயதுர்க்கம்—பெல்லாரி சாலையில், கொள்ளையிட்ட பொருள்களைப் பங்கிட்டுக்கொண்டிருந்தனராம். அதை ஒரு பஸ் டிரைவர் கண்டு போலீசுக்கு அறிவித்தார். போலீசாரும் கிராமத்தாரும் மேற்படி கள்ளர்களைப் பிடிக்க முயன்றனர். அவர்கள் அருகில் உள்ள காட்டுக்குள் ஓடி ஒளிந்துகொண்டனர். இருந்தாலும், அக்காட்டை சுற்றி வளைத்துக் கொண்டு அன்று இரவே, அவர்களை போலீசாரும் கிராமத்தாரும் பிடித்துவிட்டனர்.

எகிப்து பிரதமரைக் கொல்ல முயற்சி!

அலெக்சாண்டிரியா நகரில் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் எகிப்துபிரதமர் நாசர் மீது இருபது வயதுடைய முஸ்லிம் இளைஞர் ஒருவர் பலமுறை துப்பாக்கியினால் சுட்டதாயும், ஆனால் பிரதமர் நாசருக்கு அபாயம் எதும் இல்லை என்றும் தெரிகிறது.

எகிப்துப் பிரதமரைக் கொலை செய்ய முயன்ற அந்த இளைஞனின் பெயர் மகமது அப்துல் லதீப் என்றும், அவன் எகிப்திய சர்க்காரால் தடைசெய்யப்பட்ட முஸ்லிம் வெளிக் கட்சியைச் சேர்ந்தவன் என்றும் தெரிகிறது.

துப்பாக்கிக் குண்டுகளினால் பிரதமர் நாசர் அருகே இருந்த இருவர் காயமுற்றனர் என்று தெரிகிறது.

முகமது அப்துல் லதீப் பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டு பின்னர் போலீசாரால் கைது செய்யப்பட்டான் என்றும் தெரிகிறது.

பிரதமரைக் கொலை செய்ய முயன்ற செய்தி கேட்டு ஆத்திரம் அடைந்த மக்கள் கூட்டம் கெய்ரோவில் உள்ள முஸ்லிம் வெறியர் சங்க தலைமை அலுவலகத்தைத் தாக்கி அதனை தீயிட்டுக் கொளுத்தினர் என்று தெரிகிறது.

ஒத்திவைக்கப்பட்டது!

கொழும்பு, அக். 26—

இலங்கை — இந்தியர் பற்றிய டில்லி ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது குறித்து, இலங்கை அயல் நாட்டு விவகார அதிகாரிகளுக்கும் இந்திய ஹை கமிஷனர் காரியாலய அதிகாரிகளுக்குமிடையே நடைபெறப் போவதாயிருந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டு விட்டதாம்! மேலும், இலங்கை அதிகாரிகளுக்கும், இலங்கைத் தோட்டத் தொழிலதிபர்களுக்கு மிடையே நடைபெறவிருந்த ஒரு கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு; இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.